பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 07 2024 **WEDNESDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஊழலை ஒழிப்பதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி திட்டவட்டமாக கூறியுள்ளார்.

2. **Zika** வைரஸ் பாதிப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது

3. விளையாட்டுத்துறையினருக்கு 3 சதவீத இடஒதுக்கீடு வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம் அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

4. கோவை மாநகர மேயர் திருமதி. கல்பனா ஆனந்த்குமார் மற்றும் நெல்லை மாநகர மேயர் திரு. சரவணன் ஆகியோர் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளனர்.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் பங்கேற்க இந்தியாவின் **Jyothi Yarraji** தகுதி பெற்றுள்ளார்.

<<<<<>>>>>

ஊழலை ஒழிப்பதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி திட்டவட்டமாக கூறியுள்ளார். குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு இன்று மாநிலங்களவையில் பதில் அளித்து அவர் பேசினார். ஊழலை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதில் அரசு தலையீடு என்பதே இல்லை என்றும் அவர் கூறினார்.

ஊழல் புரிந்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்றும், இது நாட்டு மக்களுக்கு தாம் அளிக்கும் உத்தரவாதம் என்றும் அவர் தெரிவித்தார். தமது அரசிற்கான வழிகாட்டியாக அரசியல் சாசனம் திகழ்கிறது என்றும் அவர் கூறினார். பிரதமரின் பதிலுரைக்குப் பின்னர், குடியரசுத் தலைவர் உரை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து, மாநிலங்களவை மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுவதாக அவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் அறிவித்தார். முன்னதாக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மாநிலங்களவையிலிருந்து வெளிநடப்பில் ஈடுபட்டன.

<<<<<>>>>>

**Zika** வைரஸ் பாதிப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

மகாராஷ்ட்ராவில் **Zika** வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டதையடுத்து, சுகாதார சேவைகளின் தலைமை இயக்குநர் டாக்டர் **Atul Goyal** மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் இதற்கென சிறப்பு அதிகாரியை நியமிக்குமாறு அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள் இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பது குறித்து உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**<<<<<>>>>>**

விளையாட்டுத்துறையில் சாதனை படைத்தவர்களுக்கு அரசு பணிகளில் 3 சதவீத இடஒதுக்கீடு வழங்குவது குறித்து அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தலைமைச்செயலர் திரு. சிவ்தாஸ் மீனா மற்றும் உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

கோவை மாவட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை ஏற்படுத்துவது குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**<<<<<>>>>>**

தமிழக சிறைச்சாலைகள் போதைப்பொருள் விற்பனை மேற்கொள்ளும் இடமாக மாறிவிட்டதா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புழல் சிறையில் உள்ள கைதி ஒருவர் அங்கிருந்தே வெளியில் போதைப்பொருள் விற்பனையை ஒருங்கிணைத்ததாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, இந்த சம்பவத்தை கண்டறிந்து, போதைப்பொருட்களை பறிமுதல் செய்ததுடன், தமிழக காவல்துறைக்கும், சிறைத்துறைக்கும் இதுதொடர்பான விவரங்களை அளித்ததாக வெளியான செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையில், மத்திய அரசு தலையிட்டு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான இடஒதுக்கீட்டு நடைமுறையில் திருத்தம் மேற்கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, இந்த ஆணையை ரத்து செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. ராமதாஸ் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

கோவை மாநகர மேயர் திருமதி. கல்பனா ஆனந்த்குமார் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கோவை மாநகராட்சி ஆணையர் திரு. சிவகுரு பிரபாகரனிடம் இதற்கான கடிதத்தை அவர் வழங்கினார். தனிப்பட்ட காரணங்களுக்கான பதவியை ராஜினாமா செய்வதாக திருமதி. கல்பனா ஆனந்த்குமார் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதேபோல், நெல்லை மாநகர மேயர் திரு. சரவணனும் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

<<<<<>>>>>

பாதுகாப்புத் துறை குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளை களைவதற்கான சிறப்பு முகாம் தற்போது நடைபெற்று வருவதாக பாதுகாப்பு கணக்கு கட்டுப்பாட்டாளர் திரு. ஜெயசீலன் கூறியுள்ளார். இன்று சென்னையில் எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<>>>>>

தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் உரிய முறையில் அவர்களுக்கு சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேசிய தூய்மைப் பணியாளர்கள் நல ஆணையத்தின் தலைவர் திரு. வெங்கடேசன் கேட்டுக் கொண்டுள்ளார். இன்று ஒசூரில் தூய்மைப் பணியாளர்களின் குறைகளை கேட்டறிந்த பின்னர், அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு பேசினார்.

தூய்மைப் பணியாளர்களின் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. வெங்கடேசன் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

**LTTE-**ஐ சட்டவிரோத அமைப்பாக அறிவிப்பதற்கு போதுமான காரணம் உள்ளதா என்பது குறித்து ஆராய்வதற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நடுவர் மன்றம் இதுதொடர்பான கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமான காரணங்களை தில்லி உயர்நீதிமன்ற வளாகத்தில் செயல்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு நடுவர் மன்றத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடுவர் மன்றத்தில் வரும் 23ஆம் தேதி மாலை மணி 4.30-க்கு நேரில் ஆஜராகி கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு நடுவர் மன்றத்தின் பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

திருப்பூர் மாவட்டத்தில், நெகிழிப் பை இல்லா தினத்தை முன்னிட்டு, மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் திரு. கிறிஸ்துராஜ், ஆயிரத்து 500 மாணவர்களுக்கு மஞ்சள் பைகளை வழங்கினார்.

<<<<<>>>>>

தருமபுரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் பை தவிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி, ஆட்சியர் திருமதி. சாந்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

விருதுநகர் மாவட்டத்தில் நெகிழிப் பை இல்லா தினத்தை ஒட்டி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. ஜெயசீலன் இன்று தொடங்கி வைத்தார். பள்ளி மாணவர்கள் இதில் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

நாமக்கல் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் திருமதி. உமா, பயணிகளுக்கு மஞ்சள் பைகளை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

<<<<<>>>>>

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் மூன்றாவது வடக்கு சரக்கு தளத்தை இயந்திரமயமாக்குவதற்கான ஒப்பந்தம் தனியார் நிறுவனத்துடன் இன்று கையெழுத்திடப்பட்டது.

<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம், ஓரிக்கையில் உள்ள ஆதிதிராவிட நலப்பள்ளி மாணவியர் விடுதியில் ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>

வைகை அணையிலிந்து மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் முதல்போக பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் பங்கேற்க இந்தியாவின் **Jyothi Yarraji** தகுதி பெற்றுள்ளார்.

உலக தர வரிசைப் பட்டியலில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அவர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

100 மீட்டர் தடைஓட்டத்தில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கும் முதல் பெண் என்ற பெருமையை **Jyothi Yarraji** பெற்றுள்ளார்.

<<<<<>>>>>

உலக டிவென்டி டிவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணி, பார்படாஸிலிருந்து இன்று புறப்பட்டது. நாளை அதிகாலை புதுதில்லி வரும் இந்திய அணியினர், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளனர்.

<<<<<>>>>>

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் ஆல்ரவுண்டர் பிரிவில் இந்தியாவின் **Hardik Pandya** முதலிடத்தை பிடித்துள்ளார்.

<<<<<>>>>>

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

<<<<<>>>>>

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Negi** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தோனேஷியாவின் **Yogya Karta-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் **Navya Kanderi** மற்றும் **Adarshini-**யும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ronak Chouhan, Pranam Ram,Pranay Shettigar** ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Vansh Dev - Shrivani** இணையும், **Bhargav Ram – Vennala** இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**<<<<<>>>>>**

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று ஹாங்காங்கை வென்றது.

**<<<<<END>>>>>**